**Deposition of Witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate, No.III, Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 226/2022 |
| Police Station | : Devanampattinam P.S. |
| Deposition of witness for Prosecution | : L.W.3 / P.W.2 |
| Name | : பிச்சாண்டி |
| Father Name/Husband Name | : மாணிக்கம் |
| Village | : |
| Cuddalore | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 31.01.2025 நாளாகிய இன்று திருமதி.L.Vanaja, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதன்மை விசாரணை

01. நான் தற்போது தாழங்குடாவில் வசித்து வருகிறேன். மரம் அறுக்கும் பட்டறை வைத்திருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 05.02.2022 அன்று மதியம் 02.30 மணியளவில் நானும், கௌதம் என்பவரும் தாழங்குடா கடற்கரை அருகே வலை பின்னும் கட்டிடம் அருகே நடந்துவந்துக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது. சத்தம் கேட்டு அங்கு சென்று பார்த்தபோது சதீஷ் மற்றும் கர்ணன் கீழே கிடந்தார்கள். ஆஜர் எதிரிகள் வைமுருகன் மற்றும் அவரது பிள்ளைகள் 3 பேரும் கட்டையாலும், கையாலும் அடித்துக்கொண்டிருந்தார்கள். எங்களை பார்த்தவுடன் அவர்கள் ஓடிவிட்டார்கள்.

02. எதற்காக உன்னை அடித்தார்கள் என்று நாங்கள் கேட்டபோது தாழங்குடாவில் முருகம்மாள் இறந்தபோது கடலுக்கு செல்லக்கூடாது என்று சொல்லப்பட்டு மீறி வைமுருகன் சென்றதால் அவர்களுக்குள் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததாகவும், அதனால் தான் அடித்ததாகவும் சொன்னார். நானும், கௌதமனும் கர்ணன் மற்றும் சதீஷ் இருவரையும் கடலூர் அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு சென்றோம். கர்ணனுக்கு தோளில் அடிப்பபட்டிருந்தது. சதீஷ் என்பவருக்கு மூக்கில் அடிப்பட்டிருந்தது. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

03. ஆஜர் எதிரிகள் சதீஷ் மற்றும் கர்ணனை அடித்ததை நீங்கள் அருகில் இருந்து பார்த்தீர்களா என்றால் இல்லை. எதிரிகள் அவர்களை அடித்துக்கொண்டிருந்தபோது சற்று தூரத்தில் பார்த்துவிட்டு ஓடிவந்தேன். யார் யார் எந்தெந்த ஆயுதங்களால் அடித்தார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் கும்பலில் அடிக்கும்போது ஓடி வந்து பார்ப்பதில் தான்

இருந்தேன். யார் யார் என்னென்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்ற கவனிக்கவில்லை. கம்பு மற்றும் தடியால் அடித்தார்கள். என்ன தடியால் அடித்தார்கள் என்றால் என்ன தடியை எடுத்துக்கொண்டு ஓடுகிறார் என்று பார்த்துக்கொண்டா இருக்க முடியும். எத்தனை தடியை கொண்டு தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது.

**04.** அ.சா.1க்கு நான் சொந்த தாய்மாமன். சண்டை நடந்த பிறகு போலிசார் என்னை 03.30 மணிக்கு மேல் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலிசாரின் பெயர் எனக்கு தெரியாது. ஏட்டு மற்றும் உதவி ஆய்வாளர் வந்தார்கள். இருவரும் என்னை விசாரித்தார்கள். இருவரும் விசாரித்து தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. இருவரும் விசாரித்தார்கள். ஒரு வாக்குமூலம் தான் வாங்கினார்கள். நான் சொல்ல சொல்ல கைப்பட எழுதினார்கள். அதற்கு பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் கர்ணன் உடம்பில் எங்கே அடிப்பட்டிருந்து என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சண்டை நடந்தபோது பொதுமக்கள் சுமார் 30 பேர் வேடிக்கை பார்த்தார்கள்.

**05.** எங்கள் ஊரில் பொதுவாக பிரச்சனை நடக்கும்போது தீர்வு காண்பதற்காக காவல் நிலையம் செல்வது வழக்கம் என்றால் சரிதான். மீனவர் கூட்டுறவு சங்க தலைவராக பதவி வகித்தீர்கள் என்றால் சரிதான். முன்னால் தலைவராக இருந்தேன். ஆஜர் எதிரிகள் உங்கள் அக்கா மகனான கர்ணனை தாக்கியதில்லை என்றும், மீனவர் கூட்டுறவு சங்க தலைவராக இருந்தபோதே பணம் கையாடல் செய்ததால் அதுப்பற்றி கேட்டதால் உங்கள் அக்கா மகனை வைத்து பொய்யான புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் கையாடல் செய்திருந்தால் அதில் இருந்த உறுப்பினர்கள் புகார் கொடுத்திருப்பார்கள். நான் கர்ணனையும், சதீஷ் என்பவரை கௌதமும் எங்களக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் தனித்தனியே மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். TN-31-7151 என்ற இருசக்கர வாகனத்தில் அழைத்துச்சென்றோம்.

**06.** முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையில் கூறிய விவரங்களை போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. நீங்கள் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. சண்டை நடந்த இடம் எங்கள் வீட்டிலிருந்து 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். சண்டை எங்கு நடந்தது என்று குறிப்பாக உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. வலை பின்னும் கட்டிடத்தின் வெளியே கிழக்கு பக்கம் சம்பவம் நடந்தது. முருகம்மாள் என்பவர் இறந்ததால் மீன் பிடிக்க கூடாது ன்று மாவட்ட ஆட்சியர் உத்தரவு மற்றும் மீன்வளத்துறை அமைச்சரின் எழுத்துப்பூர்வமான உத்தரவு ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு எந்த உத்தரவும் இல்லாதபோது தனிமனிதன் மீன்பிடி தொழில செய்வதற்கு எந்த தடையும் விதிக்கக்கூடாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை

Taken down by me in the presence of Accused, and read over to the witness and admitted by her/him to be correct.

(S/d. L.Vanaja, B.A.,B.L.,)
Judicial Magistrate No.III
Cuddalore.

**Deposition of Witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate, No.III, Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 226/2022 |
| Police Station | : Devanampattinam P.S. |
| Deposition of witness for Prosecution | : L.W.7 / P.W.3 |
| Name | : மாரியப்பன் |
| Father Name/Husband Name | : செல்லப்பன் |
| Village | : |
| Cuddalore | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 31.01.2025 நாளாகிய இன்று திருமதி.L.Vanaja, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதன்மை விசாரணை**</u>

01. நான் தற்போது தாழங்குடாவில் வசித்து வருகிறேன். நான் மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். கடந்த 06.02.2022 அன்று காலை 09.00 மணியளவில் தாழங்குடா கடற்கரையில் உள்ள வலை பின்னும் கட்டிடத்தில் நான் உட்கார்ந்திருந்தபோது தேவனாம்பட்டினம் போலிசார் முதல் நாள் நடந்த பிரச்சனை தொடர்பாக வரைபடம் வரைந்து போலிசார் வந்து விசாரித்து சென்றதற்கு சாட்சியாக என்னை இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நான் இரண்டாவதாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். **( பார்வை மகசரில் உள்ள சாட்சியின் 2வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது)** போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

<u>**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து யாருடையது என்று எனக்கு தெரியாது. போலிசார் கையெழுத்து போட சொன்னதால் தான் போட்டீர்கள் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் சரிதான். அதுப்பற்றி என்னிடம் எதுவும் விசாரிக்கவில்லை.

Taken down by me in the presence of Accused, and read over to the witness and admitted by her/him to be correct.

(S/d. L.Vanaja, B.A.,B.L.,)
Judicial Magistrate No.III
Cuddalore.